தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2016**

**D021** இலக்கணம்-3 (பொருள்)

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. சிறுபொழுதின் வகைப்பாடுகள் எத்தனை?
2. இருவகைக் கைகோள்கள் எவை?
3. பாங்கன் கூட்டத்தின் வகைகள் எத்தனை?
4. பகற்குறி இடையீட்டு வகைகள் எத்தனை?
5. வரைவு மலிதலின் வகைகள் எத்தனை?
6. உடன்போக்கின் வகைகளுள் இரண்டினைக் கூறுக.
7. ஓதல் பிரிவு என்றால் என்ன?
8. அகப்புறப் பெருந்திணையில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
9. தொல்காப்பியர் கூறும் அகத்திணை எத்தனை?
10. புறப்பொருள் வெண்பாமாலை எத்தனை படலங்களை உடையது?
11. ‘உழபுல வஞ்சி’ எதனைச் சொல்கின்றது?
12. உழிஞைப் போரின் வேறு பெயர் என்ன?
13. எருமை மறம் என்ற துறைப் பெயருக்கான காரணம் என்ன?
14. வாகைத் துறைகள் மொத்தம் எத்தனை?
15. மூவேந்தர்க்குரிய அடையாளப் பூக்களைக் குறிப்பிடுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
2. கைக்கிளையின் பாகுபாடுகள் எத்தனை? யாவை?
3. வரைவு – குறிப்பு வரைக.
4. செவ்வணி என்றால் என்ன?
5. போர்க்கான பொதுக் காரணங்கள் மூன்றனைக் குறிக்க.
6. புறப்பொருள் வெண்பா மாலை வழிக் காஞ்சியின் இலக்கணத்தை எழுதுக.
7. பாண்பாட்டு என்னும் துறையை விளக்குக.
8. நடுகல் பற்றிய துறைகள் எவை?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) அகத்திணைக்கு உரிய மூன்று பொருள்களையும் விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) எண்வகை மணங்கள் குறித்தும், களவு கந்தர்வத்தோடு ஒத்துப்போகும் முறையையும் விளக்கியுரைக்க.

2. (அ) வெட்சித்திணை குறித்தும் அதன் துறைகள் குறித்தும் விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) காஞ்சிப்போருக்கு முந்தைய நிகழ்வுகளை விளக்கியுரைக்க.

3. (அ) நாற்கவிராச நம்பி கூறும் கற்பிற்குரிய கிளவிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உள்ளுறை உவமை, இறைச்சி குறித்துக் கட்டுரையொன்று வரைக.

***